ஓம்

திருச்சிற்றம்பலம்

# திருவொற்றி

# வடிவுடை அம்மை அருள்வேட்டல்

சித்தாந்தப் பிரகாச சபைத் தலைவர்

பேராசிரியர்

பாரிப்பாக்கம் **கண்ணப்ப முதலியார்** அவர்கள்

பாடியது

இராமலிங்க சுவாமிகள் சமாஜத் தலைவர்

**வில்சன் கம்பெனி**

துவிபாஷி **கா. மாணிக்க முதலியார்** அவர்களால்.

வெளியிடப்பட்டது

உரிமை ஆக்கியோர்க்கே

1950



துவிபாஷி கா. மாணிக்க முதலியார் அவர்கள்

ஓம்

திருச்சிற்றம்பலம்

# முன்னுரை

இறைவனுக்கு உருவம், அருவுருவம், அருவம் என்னும் மூன்று நிலைகளும், அவைகட்கு அப்பாற்பட்ட - இன்ன தன்மையன் என்றறிய இயலா - நிலையும் உண்டு. ஒரு நாமம் ஓருருவம் ஒன்று மிலா இறைவன், அன்பர்களுக்கு அருள் புரிதல் காரணமாக, பல திருவுருவங்களும், பல திருப்பெயர்களும் உடையவனாகத் தோற்றம் அளிக்கின்றான். இங்ஙனம் தோற்றமளிக்கும் அவன் திருவுருவங்கள் எல்லாம் அவனது அருள் திருமேனிகளே அன்றி மாயா காரிய உருவங்கள் அல்ல.

அருவமோ உருவா ரூப மானதோ அன்றி நின்ற
உருவமோ உரைக்குங் கர்த்தா வடிவெனக் குணர்த்திங் கெனின்
அருவமும் உருவா ரூப மானதும் அன்றி நின்ற
உருவமும் மூன்றும் சொன்ன ஒருவனுக் குள்ள வாமே.

உருவருள் குணங்க ளோடும் உணர்வருள் உருவில் தோன்றும்
கருமமும் அருள்அ ரன்தன் கரசர ணாதி சாங்கம்
தருமருள் உபாங்கம் எல்லாம் தானருள் தனக்கொன் றின்றி
அருளுரு உயிருக் கென்றே ஆக்கினன் அசிந்தன் அன்றே.

என்னும் சிவஞானசித்தித் திருவிருத்தங்கள், அவ்வுண்மைகளை விளக்கி நிற்கின்றன. அவ்வருள் திருவுருவங்களைக் கட்புலன் இனிக்கக் கண்டு மகிழவும், அவனது அருட்பெருங் குணங்களை மன அமைதியுடன் இன்புற எண்ணிக் களிக்கவும் எண்ணி இனித்து

மகிழ்ந்த அவனது அருட்பெருஞ் சிறப்புக்களைச் சொல்லினிக்க வாழ்த்தி மகிழவும், அங்ஙனம் கட்புலனினிக்கக் கண்டு மகிழ்ந்தும், மனப்புலன் அமைதியுற நினைந்து மகிழ்ந்தும், வாய்ப்புலன் இனிக்க வாழ்த்தி மகிழ்ந்தும், பன்னாட்கள் பயின்ற அனுபவத்தால் புலனழுக் கற்றுப் புனிதமுற்ற நிலையில், அவன்மயமாகி அவனது அருட்பெரு நிலையைத் தலைக்கூடுதற்கு இயைந்தவாற்றான், அவனது அருட்பெரு மற்புதநிலை அனுபவத்தத்துவ உண்மைகள் எல்லாம் அமைத்தே திருக்கோயில்கள் ஆன்றோர்களால் எடுக்கப்பட்டன. மேற்கூறிய வழிபாட்டுக் கலைகளும் அமைக்கப்பட்டன.

அவ்வருள் திருவுருவங்களும் அவைகள் அமைந்திலங்கும் அற்புதத் திருக்கோயில்களும், காணவும் கருதவும் இயலாத முழு முதற் பரம்பொருளைக் காணவும் கருதவும் இயலுமுறை காட்டித் துணை புரியும் கருவூலங்களாம் கலைச்செல்வங்களாக அமைந்து துலங்குகின்றன.

அவ் வழிபாடுகள் பலவற்றுள்ளும் பாட்டால் வழிபடுதல் சிறந்தவொன்றாக இலங்குகின்றது. நம் தமிழ்மொழிக்கண் கோடிக் கணக்கில் தோத்திரப் பாடல்கள் தோன்றி நிலவுவதொன்றே இதற்குப் போதிய சான்றாம்.

'வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டர் இனத்தகத்தான்' 'பத்திமையாற் பணிந்தடியேன் தன்னைப் பன்னாள் பாமாலை பாடப் பயில்வித்தானை' 'பன்னிய நூல் தமிழ்மாலைப் பாடுவித் தென் சிந்தைமயக் கறுத்ததிரு அருளினானை' (திருநாவுக்கரசர்) 'அருச்சனை பாட்டே யாகும்' (சேக்கிழார்) என்பன போலும் திருவாக்குக்கள் பாட்டு வழிபாட்டின் சிறப்பினைப் பாராட்டுதல் காணலாம்.

இங்ஙனம் பாடிப் போற்றுமுறை பல்லாயிர ஆண்டுகட்கு முற்பட்ட பழந்தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தின்கண் ஓதப்பட்டுத் தேவபாடாண்திணை எனச் சிறப்புற்றிருக்கின்றது. ஆசிரியர் தொல்காப்பியனார்,

'பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே
நாடுங் காலை நாலிரண் டுடைத்தே'

என்பது முதலாக எடுத்துரைக்கும் நூற்பாக்களால் உணர்த்தப்படும் பாடாண்திணைப் பகுதிக்கண் இது சேர்ந்தொளிர்கின்றது.

பாடாண்திணை என்பது பாடப்படுவோரது, ஒளி, ஆற்றல், ஈகை, அளி என்னு மிவற்றை ஆராய்ந்து சொல்லுவதாம். இதனை

'ஒளியும் ஆற்றலும் ஓம்பா ஈகையும்
அளியும் என்றிவை ஆய்ந்துரைத் தன்று'

எனப் புறப்பொருள் வெண்பாமாலை விளக்கலால் அறியலாம்.

அம்முறையில் யான் என் இடக்கை எடுக்க இயலாது நோய் வாய்ப்பட்டிருந்த ஞான்று, அந்நோய் நீக்கி அருளுமாறு யான் அடிக்கடி சென்று வழிபாடாற்றி வரும் திருவொற்றியூர் என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டெழுந் தருளியுள்ள வடிவுடை அம்மையின் அருள்வேட்டுப் பாடிய இப்பாடல்களுக்கு திருவொற்றி வடிவுடை அம்மை அருள்வேட்டல் என்னும் பெயர் சூட்டப்பட்டது. எண்ணிறந்த உலகங்கள் எல்லாவற்றினையும், காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடும், தத்துவாதீத முழுமுதற் செழும்பொருளாம் இறைவன் திருவருளே, உலகுயிர்களை அளிக்கும் தன்மையால் 'அம்மை' என வைத்து ஓதப்படுகின்றதாகலின், அத்திருவருளுருவாகிய அம்மையின் அளப்பரும் புகழ்ப்பெருக்கினை நினைந்து புனைந்த சொன்மாலையாம் இதனை என் கெழுதகை நண்பரும். பேராசிரியர், கா. நமச்சிவாய முதலியார் அவர்கள் இளவலுமாகிய திருவாளர் வில்சன் கம்பெனி துவிபாஷி, கா. மாணிக்க முதலியார் அவர்கள் கைம்மாறு கருதாது தம் பொருட்செலவில் வெளியிட்டருளிய பெருந்தகைமைக்கு யான் அவர்பால் என்றும் குன்றா நன்றி பாராட்டும் கடப்பாடுடையேன். இந்நூலகத்து அவர்தம் உருவப் படத்தினைச் சேர்க்க அவ்வுருவப்படத்தின் அச்சினை (Block) மனமுவந்துதவிய சென்னை மாணவர் மன்றத் தேர்தல் குழுத் தலைவரும், என் கெழுதகை நண்பருமாகிய புலவர், மயிலை, சிவமுத்துக்குமாரசுவாமி முதலியார் அவர்கட்கும், இந்நூற்கு நன்மொழி கூறி என்னைச் சிறப்பித்த என் கெழுதகை நண்பர்,

அ

தமிழ்ப் பெரியார், திரு. வி. கலியாணசுந்தரனார் அவர்கட்கும், இந்நூலினை அழகுற அச்சிட்டுத் தந்த சாது அச்சுக்கூடத்தினர் கட்கும் எனது மனமார்ந்த நன்றி என்றும் உரியதாம்.

'அறிவெனப் படுவது பேதையார் சொன்னோன்றல்'

மெய்கண்டவளாகம்,
65, முல்லாசாயபு தெரு
சென்னை-1
15—11—1950

பாரிப்பாக்கம்
**கண்ணப்ப முதலியார்**

# திரு. வி. க. நன்மொழி

பாரிப் பாக்கம் எழுசைவப்
    பரிதி பசுமைத் தமிழ்த்திங்கள்
வேரி அருவிக் கலைச்சோலை
    வேதத் தென்றல் குணக்குன்று
மாரி என்னக் கண்ணப்ப
    வள்ளல் பொழிந்த மலர்மணிகள்
வாரி ஒற்றித் தாயணிந்தாள்
    வாழ்த்திக் காண்க மாநிலமே.

திருச்சிற்றம்பலம்

## திருவொற்றி

# வடிவுடை அம்மை அருள்வேட்டல்

திருவார் பொழில்சூழ் திருவொற்றித்
தியாகப் பெருமான் திருவருளே !
மருவார் குழலார் மடமயிலே !
மகிழ்பே ரின்பம் பொழிமுகிலே !
தருவார் தெய்வத் தடம்பொழிலே !
தமிழாம் அமுதப் பெருங்கடலே !
உருவார் அழகின் மலர்க்கொடியே !
ஒளியார் வடிவாம் பிகைமணியே !

தண்ணார் மதிசேர் செஞ்சடையின்
தியாகப் பெருமான் திருவொற்றிப்
புண்ணார் ஞானப் பசுங்குதலைப்
பகரும் நிகரில் பசுங்கிளியே !
எண்ணு அழகின் வடிவுடையாய் !
இமவான் அளித்த பொற்கொடியே !
கண்ணார் எழிலின் மான்கன்றே !
கருணை அமுத மாகடலே !

தெங்கு சிறந்த திருவொற்றித்
  தியாகப் பெருமான் திருவுளமே!
மங்கைக் கரசாம் மாமணியே!
  மலையத் துவசன் பெருமணியே!
எங்கள் வினையைக் கடிந்தொளிரும்
  எழிலார் வடிவாம் பிகைஅரசே!
சங்கத் தமிழின் சுவையமுதே!
  சகல கலைக்கும் தாயகமே! 3

கொன்றைச் சடையான் திருவொற்றிக்
  குலவும் தெய்வ மணிவிளக்கே!
மன்றில் நடனம் புரிகின்ற
  மணியின் ஒளியே! மடப்பிடியே!
என்றும் எங்கள் உயிர்க்குயிராய்
  இலங்கும் எழில்சேர் வடிவுடையாய்!
நன்றே உலகின் ஐந்தொழிலும்
  நடாத்தும் எம்மான் நாயகியே! 4

காதம் புதிய மணங்கமழும்
  கடப்ப மலரார் ஒற்றியில்வாழ்
நாதர் வடிவிற் பாதியுரு
  வாகு நலஞ்சேர் வடிவுடையாய்!
ஏதம் நீக்கி மெய்ஞ்ஞானம்
  எளியேற் கருளல் என்றோதான்?
பாதம் தொழுவார் பெறும்பயனும்
  பரமா னந்தப் பெருங்கடலே! 5

தேவர் போற்றும் திருவொற்றித்
 தியாகப் பெருமான் அருளணங்கே!
மூவர் போற்றுந் திருவடியை
 முதிர்ந்த அன்பின் போற்றறியேன்
சேவை மகிழ்ந்தே அருளளிக்கும்
 தெய்வ வடிவ நாயகியே!
பூவிற் புகழ்செந் தாமரையே!
 புனிதர்க் கருளும் கற்பகமே! 6

மட்டார் கமலம் மலரொற்றி
 மகிழும் தியாகப் பெருமானின்
மட்டில் காதற் களஞ்சியமே!
 மலரார் அளக மடமயிலே!
அட்ட வடிவாய் எம்பெருமான்
 ஆங்காங் கொளிர அகிலமெலாம்
கட்டி யளிக்கும் வடிவுடைய
 கருணை ஞான நாயகியே! 7

மணத்தாற் சிறந்த மகிழொற்றி
 மாடத் திருந்த சங்கிலியார்
மணத்தை வேட்ட ஆரூரர்
 மகிழ்க்கீழ் அன்று சூளுரைக்கக்
குணத்தால் அருளும் தியாகர்தமைக்
 கூடி யிருந்த கோமளமே!
எணத்தான் அறியாச் சொருபநிலை
 இலகும் வடிவ நாயகியே! 8

ஆடும் பெருமான் திருவொற்றி
அமரும் வடிவப் பெருவாழ்வே !
நாடும் பொருட்சுவை சொற்சுவையும்
ஞான ஒளியார் அருட்சுவையும்
பாடும் தமிழ்த்தேன் பாக்கள்தொறும்
பாய்ந்தே இனிக்கப் பணித்தருளாய்
தேடும் அடியார் திருவுளத்துத்
தித்தித் திருக்கும் தெள்ளமுதே ! 9

கங்கை முடியார் திருவொற்றிக்
களிக்கும் தெய்வப் பெண்ணமுதே !
வெங்கல் தன்னின் வருமுனிவர்
வெங்க னூரின் வருமுனிவர்
எங்கட் கருளும் தவமுனிவர்
இருவர் போற்றும் வடிவுடையாய் !
செங்கை வேலோன் தனையளித்தாய்
செய்யாய் கருணைப் பெருவாழ்வே ! 10

செல்வம் நிறைந்த திருவொற்றித்
தியாகப் பெருமான் அருந்துணையே !
சொல்விற் பனமார் பைங்கிளியே
சொல்லின் வடிவாம் சுடரொளியே !
நல்விற் பனமார் அருட்கடலே !
ஞான வடிவாம் நாயகியே !
பல்விற் பனமும் அடியவர்க்குப்
பரிவி னளிக்கும் கற்பகமே ! 11

வளத்திற் சிறந்த திருவொற்றி
வள்ளற் பெருமான் மலர்க்குழலே!
களத்தில் விடத்தை அடக்கியருள்
கண்ணார் நுதலோன் கண்மணியே!
உளத்திற் சிறந்தார்க் கருள்பொழியும்
ஒளிசேர் வடிவ நாயகியே!
தளத்திற் சிறந்த கொன்றையணிச்
சடையான் விழையுஞ் சண்பகமே! 12

ஞாலம் புகழும் திருவொற்றி
நாதன் மகிழும் நல்லனமே!
ஏலம் சிறந்த கருங்குழலின்
எழிலார் அருளின் ஓவியமே!
கோலஞ் சிறந்த குணக்குன்றே!
கோதில் வடிவ நாயகியே!
வேலொன் றேந்தும் எம்மானை
விரும்பி அளித்த வித்தகமே! 13

பெரியோர் போற்றும் திருவொற்றிப்
பெருமான் இடங்கொள் பூங்குழலே!
அரிய தவத்தின் அபிராமி
பட்டர்க் கென்றும் அகன்ஞாலத்
துரிய புகழும் உயர்வீடும்
உதவும் ஞான வடிவத்தோய்!
கரிய விழியின் அருளொளியால்
உலகம் காக்கும் கட்டழகே! 14

மன்றல் நிறைந்த திருவொற்றி
மதிசேர் சடையான் மகிழணங்கே !
என்று மினிக்கும் செந்தமிழின்
இணையில் புலமைக் குருபரர்தம்
நன்றும் பிள்ளைத் தமிழ்கேட்டு
நயந்தே முத்து மாலைதனை
அன்றங் களித்த அங்கயற்கண்
அமுதே தமிழாம் அருள்வடிவே ! 15

நதியும் மதியும் கலந்தசடை
நம்பர் மகிழும் திருவொற்றிப்
பதிசேர் வடிவாம் பிகையென்னும்
பரம ஞான நன்னிதியே !
கதிசேர் உண்மை நெறிகாட்டும்
கருணைக் கடலே கலைஞானத்
துதிசேர் துறைகள் எலாம்கடந்த
துரிய நிலையே தூவெளியே ! 16

ஒளிக்குள் ஒளியாய் விளங்குமவன்
உள்ளம் மகிழும் திருவொற்றிக்
களிக்கும் ஞான மடப்பிடியே !
கருணை நடனம் புரிமயிலே !
பளிக்கு மணியின் எம்பெருமான்
பரிக்கும் கோல நிலைகளிலே
அளிக்கு நிலையின் அவ்வதுவாய்
அழகின் ஓங்கும் அருள்வடிவே ! 17

வெளிக்குள் வெளியாம் அம்பரத்தின்
விளங்கு நடனம் புரியுமவன்
அளிக்கும் நிலைதான் இவ்வணமென்
றுரைப்ப வாரா தெனுமுண்மை
தெளிக்கும் கோலத் திருவொற்றித்
திகழும் வடிவாம் பிகைத்தேனே !
விளிக்கும் உயிர்கள் இருளகல
விளங்கும் அருளின் முழுமதியே ! 18

தேனார் கொன்றைச் சடைமுடியின்
தியாகப் பெருமான் தனையணைந்த
கானார் அலங்கற் கருங்குழலே !
களிக்கும் ஞானத் தெள்ளமுதே !
வானார் தேவர் புகழ்ஒற்றி
வுனப்பின் வடிவாம் பிகையணங்கே !
ஊனார் பிறவிக் கடல்கடக்க
ஒளியால் அழைக்கும மணிவிளக்கே ! 19

எங்கும் புகழார் திருவொற்றி
எந்தை பெருமான இன்னருளே !
பொங்கும் அருளின் பேரழகே !
புனித ஞானத் தடங்கடலே !
வெங்கல் வருவார் வெங்கனூரார்
வேங்கை மரத்தார் எனுமுனிவர்
தங்கட் கருளும் வடிவுடையாய்
தமியேற் கருளும் நாளென்றோ ? 20

பூங்கா ஒளிரும் திருவொற்றிப்
புனிதன் மகிழும் பூங்கிளியே!
நீங்கா அன்பின் நினைநினைந்து
நிறைந்த காதல் கனிந்தோர்கள்
தாங்கா தலிக்கும் பேறனைத்தும்
தணவா தடைந்து சிறந்திடவே
தேங்கா தளிக்கும் திருவுடையாய்
தெய்வ வடிவ நாயகியே! 21

தென்றல் மணக்கும் திருவொற்றித்
தெய்வ மணக்கும் வடிவுடையாய்!
என்றும் பரமர் திருவுளத்தில்
இன்பம் பெருக அழகொழுக
நன்றே எழுதிப் பார்த்திருக்கும்
நவிலா ருயிரின் ஓவியமே!
வென்றார் புலன்கள் உளத்தொளிரும்
விமல ஞான மணிவிளக்கே! 22

மாடம் பலசூழ் திருவொற்றி
மகிழும் தியாகப் பெருமானின்
ஆடற் கினிய ஒற்றறுத்தே
அழகின் இனிக்க சதிகாட்டும்
தேடற் கரிய அருள்நிதியே!
தெய்வ ஞான வடிவழகே!
பாடற் கினிய வாக்களித்துப்
பகரென் பிணியும் களைவாயால். 23

நெய்தல் வளஞ்சூழ் திருவொற்றி
நிமலற் கினிய நித்திலமே!
செய்தல் அறியாச் சிறுநாயேன்
செய்பா மாலை மகிழ்ந்தேற்றே
உய்தற் குரிய பரிசாகும்
உன்றன் காட்சி அருள்வாயால்
எய்தற் கரிய எலாமளிக்கும்
இணையில் வடிவப் பேரழகே! 24

தெள்ளுந் திரைநீர் முத்தொளிரத்
திகழும் அழகின் திருவொற்றி
வள்ளற் பெருமான் மகிழணங்கே!
வருமா லிமயத் திளம்பிடியே!
எள்ளும் பிறவிக் கடல்கடக்க
இணையில் துணையாம் அருட்புணையே!
துள்ளும் பிரச மலர்க்கூந்தல்
தூய ஞானச் சுடர்வடிவே! 25

வங்க மலிந்த கடலொற்றி
வாழுந் தியாகப் பெருமானின்
பங்கி லொளிரும் பசும்பொன்னே!
பாசக் கடல்நின் றெனையெடுத்தே
எங்கும் நிறைந்த பதிப்பொருளாம்
இன்பப் பெருக்கின் சுவைகாட்டி
துங்க இன்பத் துள்ளொளிரும்
துரிய ஞான மெய்வடிவே! 26

மின்னின் மலரும் மடல்தாழை
மிளிரும் நெய்தல் கடலொற்றி
தன்னின் எம்மான் தன்னொருபால்
தணவா தோங்கும் மின்னொளியே !
என்னின் இருளாம் மலமகற்றி
இதயத் தொளிரும் நாளுளதோ ?
பொன்னின் கதிர்கால் ஓவியமே !
புனையா வடிவப் பூங்குழலே ! 27

முத்தே அரும்பும் புன்னைவளர்
மூவாப் புகழின் திருவொற்றி
அத்தன் உள்ளத் தகலாத
ஆரா இன்பப் பேராறே !
சித்தத் துன்றன் திருவுருவம்
தித்தித் திருக்கும் நாளுளதோ ?
சுத்த ஞான மெய்வடிவே !
துலங்கு சுடராய் இலங்கொளியே ! 28

அலைகள் புரளும் கடலொற்றி
அமலன் விழையும் ஆரணங்கே !
கலைகள் புரளும் கலைஞருளக்
கண்ணின் ஒளியே ஒளிமணியின்
நிலைகொள் நினது பதாம்புயமென்
நெஞ்சில் நிலவும் நாளுளதோ ?
சிலைகொள் புருவத் திருநுதலாய்
தெய்வ வடிவத் தெள்ளமுதே ! 29

திங்கள் அழகார் திருவொற்றித்
தியாகப் பெருமான் தேமொழியே!
வெங்கல் வருவார் வெங்கனூரார்
வேங்கை மரத்தார் எனும்பெயரின்
எங்கட் கருளும் தவமுனிவர்
இதயத் திலகும் பேரொளியே
பொங்கும் அழகின் பூரணமே
புனித வடிவப் புத்தமுதே! 30

முத்தங் கொழிக்கும் கடலொற்றி
முதல்வன் களிக்கும் முழுமதியே!
நித்தம் நினது பாதமலர்
நினைந்து நினைந்து நெக்குருகிச்
சித்தம் நின்றன் ஒளிமயமாய்த்
திகழ்ந்து நிற்கும் நாளுளதோ?
சுத்த ஞான மணிமன்றுள்
தோன்று மின்ப வடிவழகே! 31

சித்தர் போற்றும் தேவாதி
தேவன் வாழும் திருவொற்றி
அத்தர் உள்ளத் துள்ளொளியே!
அகிலம் புரக்கும் அற்புதமே!
சித்தந் தெளிவித் தெனையாண்டு
செய்தீ வினைகள் எலாமகற்றிப்
புத்தம் புதிய வாழ்வளிக்கும்
புனித வடிவப் பூங்கொடியே! 32

நாவ லூரின் சுந்தரர்தாம்
நயந்து பாடும் திருவொற்றிக்
கோயில் ஒளிரும் கோமளமே !
கோதில் வடிவ மரகதமே !
மூவர் தமக்கும் முழுமுதலே !
முக்கட் பெருமான் முழுநிதியே !
பூவடி வாமென் னுள்ளத்துன்
பூங்கழல் நில்வும் நாளென்றோ ? 33

சேலார் வயல்சூழ் திருவொற்றித்
தியாகப் பெருமான் மகிழ்வடிவே !
மாலார் மனத்தென் வாழ்க்கையிலே
மன்னுந் துன்பம் எலாமுனது
காலா லகற்றி அடியேற்குக்
கரையில் செல்வப் பெருக்களிப்பாய்
பாலார் மொழியால் இன்விருந்து
பரமர்க் களிக்கும் பைங்கிளியே ! 34

விண்ணோர் போற்றும் திருவொற்றி
விகிர்தர்க் கினிய வேல்விழியாய் !
கண்ணால் நினது திருவடியைக்
கண்டா தரவு பெருகிமிகப்
பண்ணா லுருகிப் புகழ்ந்துகண்ணீர்
பாயா எனையும் சேயாக
எண்ணா வளர்க்கும் பெண்ணரசே !
எண்ணெண் கலையின் எழில்வடிவே ! 35

மூவர் போற்றும் திருவொற்றி
முதல்வர் அழகின் மொய்குழலே !
தேவ ரறியாச் செழுஞ்சுடரே !
தெளிந்தோர் உளத்துத் திருவிளக்கே !
யாவ ரெனினும் அன்பரவர்க்
கருளும் அமுதப் பெருங்கடலே !
பாவ ரறியா ஒளிவடிவப்
பனிமா லிமயப் பெருநிதியே ! 36

தெண்ணீர்க் கடல்சூழ் திருவொற்றித்
தியாகப் பெருமான் திருவருளே !
கண்ணீ வடித்துன் திருவடியைக்
கையால் அலம்பக் கருதெளியேன்
உண்ணீர் ஞானத் திருவமுதை
உவட்டா தருந்தும் நாளுளதோ ?
விண்ணீர் வீழ்ச்சி எனவருளைப்
பொழியும் வடிவின் விளங்கிழையே ! 37

குயில்கள் சூழும் பூஞ்சோலைக்
கொன்றைச் சடையான் திருவொற்றிப்
பயிலுங் கோயில் வாழ்வடிவே !
பரமர் உளத்துப் படரொளியே !
செயிர்தீர் காட்சி அளித்தென்றன்
சிந்தை குடிகொள் நாளென்றோ ?
எயில்மூன் றெரித்தான் கொடுகொட்டி
இனிக்கும் கலாப மாமயிலே ! 38

நல்லோர் போற்றும் திருவொற்றி
நம்பன் மகிழும் நன்மணியே !
பொல்லாப் பாசக் கடல்கடக்கப்
புனிதர் போற்றுன் பொற்கழற்கே
சொல்லார் அலங்கல் புனைந்தணிந்து
தொழுதுள் ளுருகி அழுதறியேன்
எல்லாக் குறையும் இனிதாக்கும்
இன்ப வடிவப் பேரொளியே 39

எங்கும் நிறைந்தே எழிற்காட்சி
இலகும் வளமார் திருவொற்றி
நங்கள் பெருமான் இன்புருவே
நாத முடிவின் நற்பொருளே
வெங்கல் வருவார் வெங்கனூரார்
வேங்கை மரத்தார் இவருள்ளத்
துங்க ஒளியே ! என்னுளத்துத்
தோன்றல் என்றுன் சுகவடிவே 40

பொன்னார் கொன்றை வளரொற்றிப்
புனிதன் சுவைகொள் பூங்கரும்பே !
மின்னு யிரமோர் மெய்வடிவாய்
மேவிற் றெனவொளிர் மின்பாவாய்
பன்னு யிரத்தால் நின்னுமம்
பயின்று பணிந்தே மகிழ்ந்துருகும் !
நன்னாள் என்றோ இளங்கிளியே
நவகோ ணத்துள் ஒளிர்வடிவே ! 41

வானோர் பொழில்சூழ் திருவொற்றி
    வள்ளற் பெருமான் மலர்க்குழலே !
தேனே ரமுதப் பெருக்காறே !
    தெளிதீஞ் சுவையார் பாற்கடலே !
கானே ரலங்கற் கற்பகமே !
    கண்ணே கண்ணிற் கருமணியே !
மானேர் கரத்தார் மகிழ்வடிவே !
    மகிழ்ந்தே எனையாள் நாளென்றோ ? 42

தேவிற் சிறந்த கண்ணுதலோன்
    திகழும் ஒற்றிச் செந்தேனே !
பூவிற் புகழ்செந் தாமரையும்
    புனிதக் குவளை நன்மலரும்
காவிற் சிறந்த பூங்குமிழும்
    கோங்கும் செய்ய காந்தளுமே
ஆவிக் கினிய உருவாக
    அமைந்த வடிவே அருளாயோ ? 43

புலனாற் சிறந்தார் புகழொற்றிப்
    புனிதன் திளைக்கும் பூங்காவே!
நிலனும் நீரும் தீவளியும்
    நிலைத்த வானும் இவைசேர்ந்த
பலனா முலகும் ஒண்சுடரும்
    பனிமா மதியும் சராசரமும்
நலமா ருறுப்பாம் நல்வடிவே
    நாயேற் கருளும் நாளென்றோ ? 44

கண்டார் களிக்கும் திருவொற்றிக்
கண்ணார் நுதலோன் களிமயிலே!
வெண்டா மரையின் நல்லணங்கும்
வளமார் செந்தா மரையணங்கும்
வண்டார் சோலை மலர்தூவி
வணங்கும் தெய்வ மணிவிளக்கே!
தண்டா மரையாம் தாண்மலர்என்
தலைமேல் அணியும் நாளென்றோ ! 45

ஞாலம் போற்றும் திருவொற்றி
நம்பன் களிக்கும் நன்னுதலே !
ஏலக் குழலின் எழில்வடிவே !
இமயச் சாரல் இளம்பிடியே !
ஆலம் அயின்ற பெருமானுக்
கமுதாம் முத்தம் அளிப்பவளே !
காலன் வருங்கால் நீஎனது
கண்முன் நின்று காத்தருளே ! 46

புயல்சூழ் அழகார் திருவொற்றிப்
புனிதற் கினிய பூங்குழலே !
மயல்சூழ் மனங்கொண் டுலகதனில்
மாணச் செயலால் மதியழியும்
இயல்சூழ் நடையேன் என்றோநின்
எழிலார் தரளத் திருநகையும்
கயலார் விழியும் கனிவாயும்
கருணை வடிவும் காண்பதுவே ! 47

குருகார் வயல்சூழ் திருவொற்றிக்
கோமான் றனது கோமளமே !
உருகா மனமும் சிவஞானம்
உணரா அறிவும் உள்ளுருகிப்
பெருகா விழியும் உடையேனைப்
பிறவிக் கடலில் வீழாமே
அருகே அழைத்துன் வடிவுபொலி
அருளைப் பொழிதல் எந்நாளோ ? 48

தொண்டர் போற்றும் திருவொற்றித்
தூயோன் மகிழும் துளங்கொளியே !
அண்டர் போற்றும் மதிமுகத்துன்
அழகில் திளைத்து மகிழ்ந்துருகிக்
கெண்டை போலும் விழிக்கடைக்கண்
கொழிக்கும் கருணைப் பெருவெள்ளம்
உண்டு களிப்ப தென்றுகொலோ ?
உவட்டா வடிவின் பேரழகே ! 49

திங்கள் தவழும் பொழிலொற்றித்
தியாகப் பெருமான் திருந்திழையே !
எங்கும் நிறைந்த பெரும்பொருளே !
இளமை மாறாப் பெண்ணணங்கே !
வெங்கல் வருவார் வெங்கனூரார்
வேங்கை மரத்தார் எனுமுனிவர்
தங்கள் உளமார் ஒளிவடிவே !
தமியேற் கருளல் எந்நாளோ ! 50

இசையால் ஒளிரும் திருவொற்றி
இலங்கும் எம்மான் இன்னருளே !
திசையார் அகில மெலாந்தனது
செங்கோல் செலுத்தும் மதவேளை
மிசையார் விழியால் எரித்தாரை
மின்னின் நின்தோள் அணைந்திடச்செய்(து)
அசையாப் புகழின் இலங்கிடுநின்
அழகார் வடிவைக் காண்பதென்றோ ? 51

வாட்டந் தவிர்க்கும் திருவொற்றி
வள்ளற் பெருமான் வளரொளியே !
நாட்டஞ் சிறந்த கயல்விழியும்
நவிலும் பவழ நல்லிதழும்
கோட்டந் தருமோர் பிறைநுதலும்
கோவா முத்தப் புன்னகையும்
காட்டும் வடிவைக் கண்குளிரக்
கண்டு களிக்கும் நாளுளதோ ? 52

நாடா வளஞ்சூழ் திருவொற்றி
நம்பன் களிக்கும் நல்லொளியே !
வாடாதொளிரும் பங்கயமே !
வளரும் அழகார் முழுமதியே !
தேடாக் கிடக்கும் என்தலைமேல்
திருத்தாட் கமலம் சூட்டலென்றோ ?
ஆடா விளக்கின் என்மனத்தை
அடக்க அருளாய் அருள்வடிவே. 53

என்றும் சிறந்த திருவொற்றி
எம்மான் விழையும் எழிலணங்கே !
பொன்றும் புலனும் ஐங்களிற்றைப்
புகழார் அருளால் மதமடக்கி
நன்றும் காலால் பணித்திட்டு
நவிலுந் தலையால் செயச்செய்யும்
குன்றாக் கடமை நினதன்றோ
குவியா ஞான மலர்வடிவே ! 54

வண்டார் கமல வயலொற்றி
வள்ளற் பெருமான் வளநிதியே !
உண்டாம் அண்டம் பலப்பலவும்
உரையார் புவனம் அளப்பிலவும்
கண்டா தரவால் ஆண்டருளும்
கருணை அரசே கதிநிலையே !
வண்டார் குழலின் வளர்ஞான
வடிவே ! நின்தாள் வழங்காயோ ? 55

திருவின் மிக்க திருவொற்றித்
தியாகப் பெருமான் செழுநிதியே !
அருவும் உருவும் அருவுருவும்
அப்பால் நிலையும் கொண்டுலகின்
உருவின் மயமாய்ப் பிரிவரிதாய்
உள்ளும் புறம்பும் கலந்தெங்கும்
மருவி இலங்கும் மாமணியே !
மருவில் வடிவே அருளாயோ ? 56

பொருவில் தெய்வத் திருவொற்றிப்
புனிதன் அணியும் பூந்தொடையே !
மருவிற் பொலியும் குழற்காட்டின்
மதியாய் ஒளிரும் மரகதமே !
உருவிற் பொலியும் ஒளிவடிவே !
ஓங்கா ரத்தின் உட்பொருளே !
தருவில் தெய்வக் கற்பகமே !
தமியேற் கருளும் நாளுளதோ ? 57

தலத்திற் சிறந்த திருவொற்றித்
தியாகப் பெருமான் தவமணியே !
நலத்திற் சிறந்த ஓவியமே !
நாத வடிவாம் நாயகியே !
புலத்திற் சிறந்த சீர்காழிப்
புனிதக் குழந்தை மகிழ்ந்தருந்தக்
கலத்தில் ஞானத் திருவமுது
கறந்தே அளித்த கலையொளியே ! 58

ஞான உருவாம் புகலியர்கோன்
ஞானப் பாடல் புகழ் ஒற்றி
ஞானக் கோயில் நல்லரசே !
ஞான ஒளிகால் நன்மணியே !
ஞான மயமாய் நின்றுனது
ஞான வடிவாம் நல்லொளியை
ஞானக் கண்ணுற் கண்டங்கே
ஞானு னந்தத் திருப்பேனே ? 59

மங்குல் தவழும் மதிலொற்றி
மங்கை பங்கன் மகிழ்மணியே !
பொங்கும் இன்பப் பெருங்கடலே !
புனித ஞான மாமலையே !
வெங்கல் வருவார் வெங்கனூரார்
வேங்கை மரத்தார் எனுமுனிவர்
தங்கள் இதயத் தாமரையில்
தழைக்கும் வடிவே அருளீரோ ? 60

தென்னா டுடைய சிவபெருமான்
திகழும் ஒற்றிச் செந்தேனே !
மின்னா ருருவப் பொற்கொடியே !
மேகக் குழலார் முழுமதியே !
என்னா வதனின் நின்னெழுத்தும்
என்னெஞ் சதனில் நின்வடிவும்
மன்னா ஒளிர அருள்புரிவாய்
மகிழார் வடிவே மலர்தருவே ! 61

நாட்டிற் சிறந்த திருவொற்றி
நகர்வாழ் பெருமான் நன்னிதியே !
வாட்டி உயிரைப் பாழ்படுக்கும்
வல்லா ணவத்தின் வலிகெடுத்துக்
காட்டி இறையைச் சிவஞானக்
கருணை இன்ப வாழ்வளிப்பாய்
ஏட்டில் எழுத ஒண்ணாத
இணையில் அருளார் எழில்வடிவே ! 62

நீலம் மலரும் வயலொற்றி
நிமலன் தனது நிதிமலையே!
கோலஞ் சிறந்த கிஞ்சுகமே!
குலவும் கலாப மாமயிலே!
ஞாலத் தெனது பொறிபுலன்கள்
நாடும் சுவைகள் அவைமாற்றி
ஏலக் குழலின் வடிவேநின்
இணையில் மலர்த்தாள் அருளாயோ? 63

ஆம்பல் பழனத் திருவொற்றி
அமலன் போற்றும் ஆரணங்கே!
கூம்பல் இல்லா மலர்க்காவே!
கோதில் ஞானப் பொற்கொழுந்தே!
தீம்பல் சுவையார் தெளிதேனே!
தெவிட்டா ஞானப் பெருஞ்சுனையே!
சாம்பல் அணிந்து பணிந்தெழுவார்
தங்கள் நிதியாம் அருள்வடிவே! 64

நீறு மணக்கும் திருவொற்றி
நிமலற் கினிய நித்திலமே!
ஆறு வதன தாமரைகள்!
அலரும் மதுரச் சுவைமடுவே!
சீறு வினைகள் அவையெல்லாம்
சிதறிப் பறக்கச் செய்துன்தாள்
வீறு மருளின் வாழ்வதனை
வழங்காய் வேலார் விழிவடிவே! 65

பேரா னந்தப் பெருங்கடலாம்
பெருமான் ஒற்றிப் பெருமுகிலே!
ஆராச் சுவையார் அருளமுதே!
அகிலம் தோன்றும் ஒருமுதலே!
நீரா யுருக்கி என்னுளத்தை
நின்ருள் பொழிதல் எந்நாளோ?
தீராக் குறைதீர் கற்பகமே!
சிவமெய்ஞ் ஞானத் திருவிடிவே! 66

நிழலார் சோலை நிறைந்தொளிரும்
நீடும் புகழார் திருவொற்றி
அழலார் மேனி அமலன்தன்
அழகார் மின்னின் அருள்வடிவே!
கழலார் கமலக் காதல்மிகக்
கண்ணீர் பெருகக் கசிந்துருகிக்
குழலார் ஞானக் கொழுந்தேநின்
அருளிற் குளித்தல் என்றுகொலோ? 67

நீரார் வயல்சூழ் திருவொற்றி
நெற்றி விழியார் நீணிதியே!
காரார் அளகத் திருமுடியும்
கவினுர் கமலத் திருமுகமும்
சீரார் பவழச் செவ்விதழும்
சிந்தாத் தரளத் திருநகையும்
ஏரார் எட்டுத் திசையுமெனக்
கென்றும் தோன்ற அருள்வடிவே! 68

மண்ணிற் சிறந்த திருவொற்றி
மகிழும் பெருமான் மணமலரே !
கண்ணிற் காணும் பொருளெல்லாம்
கமல முகத்துன் கவினுருவாய்
எண்ணும் மனத்தின் எண்ணமெலாம்
எழிலார் உன்றன் இன்புகழாய்
நண்ணித் திளைக்கும் நாளுளதோ ?
நம்பன் உளத்து நல்வடிவே ! 69

பொங்கும் எழிலார் பொழிலொற்றிப்
புயங்கப் பெருமான் பொற்பாவாய் !
எங்கும் இனிக்கும் செங்கரும்பே !
எழிலார் ஞானக் கொழுங்கனியே !
வெங்கல் வருவார் வெங்கனூரார்
வேங்கை மரத்தார் எனுமுனிவர்
தங்கள் அகத்து நின்றொளிரும்
தனிமா மணியாம் அருள்வடிவே ! 70

வாசம் நிறைந்த மலர்ச்சோலை
வளரும் ஒற்றி வாழ்வடிவே
தேசு நிறைந்த செங்கனகத்
திருமா மேனி ஒளிகாட்டி
ஆசு நிறைந்த அவலமனத்
திருளை அகற்றி அருள்பொழியப்
பாச மகன்று பேரின்ப
வெள்ளம் படிதல் என்றோதான். 71

வெள்ளைக் கமலத் தடத்தமுகார்
விமலன் ஒற்றி வடிவுடையாய்
உள்ளக் கமலத் துனையிருத்தி
உண்மைக் குடைந்து கசிந்துருகிப்
பள்ளத் திழியும் வெள்ளமெனப்
பரிந்து கண்ணீர் பாயாவென்
கள்ளப் புலன்கள் உள்ளொளிரக்
காட்சி அளிக்கும் நாளுளதோ ? 72

வெள்ளம் உலவு சடைமுடியார்
விழையும் ஒற்றி வடிவுடையாய்
உள்ளக் கிழியின் உருவெழுதி
உவந்து நினைந்து நினைந்துருகி
அள்ளும் உள்ளத் திரைநீங்கி
அமைந்த நீரின் தெளிந்தென்றும்
தெள்ளு தமிழின் வடிவுடைநின்
அமுதப் பிழம்பில் திளைப்பேனோ ? 73

வெள்ளம் நிலவும் வயலொற்றி
விளங்கும் ஞான வடிவுடையாய்
உள்ளம் முழுதும் உன்வடிவே
ஒளிரக் கண்டு நாள்நாளும்
தெள்ளத் தெளிந்த பேரன்பில்
தேக்கித் திளைத்து நில்லாதேன்
அள்ளல் உள்ளத் தருளமுத
அலைகள் கொழிக்கும் நாளுளதோ ? 74

வயலார் வளஞ்சூழ் திருவொற்றி
வாணர் அவர்தம் பெருவாழ்வே !
புயலும் கடலும் பேராறும்
புனிதத் தடமும் பூந்துறையும்
இயலார் காடும் பூங்காவும்
எழிலார் மலையும் எண்டிசையும்
கயலார் விழியாய் நின்வடிவின்
காட்சி யெனநான் காண்பேனோ ? 75

தேசம் புகழும் திருவொற்றித்
தியாகப் பெருமான் செழுநிதியே !
வாசம் கமழும் மலர்க்குழலே !
வடிதீந் தமிழின் பாற்கடலே !
பாசம் அகல உடன்விரவிப்
பரிபா கம்செய் பைந்தொடியே !
ஊசல் ஆடும் என்னுளத்தை
உன்தாள் நிறுத்தாய் உயர்வடிவே ! 76

முருகு விரியும் மகிழொற்றி
முதல்வன் அணியும் முடிமணியே !
உருகி உருகிக் கசிந்திடுவார்
உள்ளத் தடத்தில் ஊற்றெடுத்துப்
பெருகு பரமா னந்தவெள்ளப்
பெருக்கே அடியேம் பெறும்பேறே !
பருகற் கினிய பசுந்தேனே !
பைம்பொன் வடிவே அருளாயோ ? 77

தண்ணென் சோலைத் திருவொற்றித்
தங்கும் பெருமான் தவமணியே !
பண்ணின் இசையாய்ப் பழச்சுவையாய்ப்
பாலின் நெய்யாய்ப் பரவியொளிர்
கண்ணின் மணியே உயிர்க்களியே !
கருணைப் புயலே சுகக்கடலே !
எண்ணின் இனிக்கும் அருள்வடிவே !
எளியேற் கருளும் நாளுளதோ ? 78

காவி அழகின் வயலொற்றிக்
கண்ணார் நுதலோன் கண்மணியே !
ஆவிக் கினிய பேரின்ப
அருள்சேர் நெறியைக் கைவிட்டு
மேவி அலைந்து பசிப்பிணிக்கும்
மேல்வே டத்தின் உலகியற்கும்
பாவி யேனும் உழைத்திளைத்தேன்
பழிதீர்த் தாள்வாய் பைந்தொடியே ! 79

பொங்கும் புகழார் திருவொற்றிப்
புனிதன் தனது பொன்னணங்கே !
செங்கம லஞ்சேர் திருத்தடமே !
தேன்துளி பொழியும் பூங்காவே !
வெங்கல் வருவார் வெங்கனூரார்
வேங்கை மரத்தார் எனுமுனிவர்
தங்கள் உள்ளத் தமிழ்வடிவே
தமியேற் கருளும் நாளுளதோ ? 80

நலமார் ஒற்றி நகர்வாழும்
நம்பன் களிக்கும் வடிவுடையாய் !
புலமார் ஞானப் பெருநிதியே !
புவன மளிக்கும் புத்தமுதே !
தலமார் இன்பப் பேராறே !
தரங்கங் கொழியா அருட்கடலே !
நிலமார் உலகின் மிடியகன்று
நின்றுள் பேசற்றல் என்றுகொலோ ? 87

அளவில் புகழார் திருவொற்றி
அமலன் விழையும் வடிவுடையாய் !
களவில் உளத்தோர் உயிர்கலந்து
கருத்திற் கலந்து கண்கலந்து
புளகம் செறியும் உடற்கலந்து
பொங்கித் ததும்பும் பெருக்காறே !
இளகும் உளமொன் றெனக்கருளி
என்னு ருயிரிற் கலத்தல் என்றோ ? 88

உலகம் புகழும் திருவொற்றி
உடைய பெருமான் மகிழ்வடிவே !
அலகில் கலையின் நிலைகடந்தங்
கறிவு கடந்தே சராசரமாம்
இலகும் புவனம் எலாம்கடந்தே
எங்கும் நிறைந்த அருட்கடலே !
திலக நுதலார் செழுங்கனியே !
சேயேற் கருளல் என்றுகொலோ ? 89

திங்கள் முடியார் திருவொற்றித்
திகழும் நிகரில் அருள்வடிவே !
பொங்கும் அழகார் தீந்தமிழே !
புனித ஞானக் கொழுங்கனியே !
வெங்கல் வருவார் வெங்கனூரார்
வேங்கை மரத்தார் எனுமுனிவர்
தங்கள் உள்ளத் தெள்ளமுதே !
தமியேற் கருளல் என்றுகொலோ ? 90

பெருகும் புகழார் திருவொற்றிப்
பெருமான் விழையும் வடிவுடையாய் !
பருகா தீள்ளத் தினித்திருக்கும்
பகரு நிகரில் பசுந்தேனே !
உருகா உள்ளம் உடையவென
தூனு முயிருங் கரைந்துருகப்
பெருகா நிற்ப தென்றுகொலோ
பெருகும் அருளின் பெருங்கடலே ! 91

செங்கம லப்பூம் பணைசூழும்
தேவ தேவன் திருவொற்றிப்
பொங்கும் அழகார் பூங்கோயில்
புனித வடிவப் பொற்கொடியே
எங்கும் நிறைந்த அருளொளியே
இன்பம் பொழியும் எழில்விசும்பே
கங்குற் குழலங் கயற்கண்ணே !
கடைக்கட் பார்வை அளிப்பாயோ ? 92

என்றும் புகழார் திருவொற்றி
இலங்கும் எம்மான் இளங்கிளியே!
நன்று நினைவார் திருவுளத்தில்
நடனம் புரியும் மணிவிளக்கே!
நின்றும் இருந்தும் கிடந்துருண்டும்
நெக்கு நெக்குள் நினைந்துருகிக்
கன்று நினைந்த புனிற்றாவின்
கலங்கேன் எனைநீ காப்பதென்றோ? 93

அருவுரு வஞ்சேர் திருவொற்றி
அமலன் மகிழும் வடிவுடையாய்!
பருவுரு வாமிவ் வுலகத்துப்
பாசங் கலந்த திரோதநிலை
தருவுரு வஞ்சேர் வினைப்போகம்
தன்னிற் றிளைத்தேன் உணவிழைந்தேன்
திருவுரு வத்துன் அருட்சத்தி
நிலையைத் தெளிவித் தருளாயோ? 94

ஆல மிடற்றான் திருவொற்றி
அமரும் ஞான வடிவழகே!
கோலஞ் சிறந்த அடியருளம்
குலவு மடுப்பில் மலவிரகால்
காலஞ் சிறந்த ஞானஅனல்
கனற்றி அருட்பே ருலைப்பெய்து
சாலச் சிறந்த சிவபோகம்
சமைப்பாய் அருளைத் தாராயோ? 95

உழவா ரத்திண் படையாளர்
உயர்திரு நாவுக் கரசென்னும்
மழைவார் கண்ணின் சொன்மன்னர்
மாமறை பாடும் திருவொற்றித்
தழையார் கற்ப காடவியின்
தண்டேன் வடிவத் தனிமலரே !
குழையார் செவியின் கோமளமே !
அருளில் குளித்தல் என்றுகொலோ ? 96

ஞானச் செல்வ நிறைந்தொளிர
ஞாலந் துறந்த பட்டினத்தார்
ஆன இன்ப மெய்யுணர
அழகிற் பாடும் திருவொற்றி
வானத் திலங்கு முழுமதியே !
வடிவார் இன்பப் பெருமழையே !
கானத் தொளிரும் கற்பகமே
கண்ணுற் கணித்தல் எந்நாளோ ? 97

ஆனுச் சிறப்பின் இராமலிங்க
அடிகள் பன்னுள் அடிபணிந்து
தேனு இனிக்கும் அருட்பாவால்
சிறப்பிற் பாடும் திருவொற்றி
வானு ரமுதப் பேராறே !
வளமார் தமிழின் அருட்கடலே !
ஊனுர் வினைகள் எலாமகற்றி
ஒளிவாழ் வளிப்பாய் ஒளிவடிவே. 98

பொருளார் தமிழின் திருவொற்றிப்
புனித வடிவப் பூங்கொடியே !
தெருளா உளத்தின் சிறியேனைத்
தெருட்டி அணைத்தல் அருளன்றோ
அருளா னந்தப் பெருங்கடலே !
அஞ்சொல் தமிழின் தெள்ளமுதே !
மருவார் ஞானக் கொழுங்கனியே !
மகிழ்ந்தே என்னை ஆண்டருளே. 99

எங்கும் பொழிலார் திருவொற்றி
இலங்கும் ஞான வடிவுடையாய் !
பொங்கு தமிழின் பெருங்கடலே !
புனித ஞானத் தெள்ளமுதே !
வெங்கல் வருவார் வெங்கனாரார்
வேங்கை மரத்தார் எனுமுனிவர்
தங்கட் கருளும் சுடரொளியே !
தமியேன் தன்னை ஆண்டருளே. 100

திருவளர் அழகார் திருவொற்றித்
தேவர் விரும்பும் செங்கரும்பே !
உருவளர் தமிழும் சிவநெறியும்
உண்மைச் சாத்திரம் ஈரேழும்
மருவளர் தமிழின் மாநிலமும்
மங்கல செந்தமித் திருமுறையும்
பெருவள நலனுடன் வாழ்ந்திடநீ
பேரருள் செய்யாய் பெண்ணமுதே. 101

# குறிப்புரை

1. திருவருளே - இறைவன் திருவருளே சத்தி ஆதலின், அம்மையார் திருவருளே என்றழைக்கப்பட்டனர். 'அருளுண்டாம் ஈசற்கது சத்தியன்றே'—சிவஞானபோதம். 'அருளது சத்தியாகும்'—சிவஞானசித்தியார்.

2. எண்ணு அழகு - நினைக்கலாகா அழகு. பாவனைக்கு அப்பாற்பட்டது.

5. ஏதம் நீக்கி - குற்றம் நீக்கி :மெய்ஞ்ஞானம் - பதிஞானம்.

7. அட்டவடிவம் - நிலம், நீர், நெருப்பு, காற்று, விசும்பு, ஞாயிறு, திங்கள், உயிர் இவை எட்டும் இறைவன் உடல். 'இருநிலனாய் தீயாகி நீருமாகி இயமான னாய்எரியும் காற்றுமாகி, அருநிலைய திங்களாய் ஞாயிறாகி ஆகாசமாய் அட்ட மூர்த்தியாகி'—அப்பர் தேவாரம். 'நிலம்நீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப் பகலோன், புலனாய மைந்தனோடு எண்வகையாய்ப் புணர்ந்துநின்றான்'—திருவாசகம்.

8. 'மணத்தாற்.........கோமளமே, கோயிலில் சத்தியம் செய்துத்தா இருந்த சுந்தரரை, மகிழின்கீழே செய்து தரும்படி செய்தது, உன் செயலே. 'சொருபநிலை' உண்மைநிலை. இறைவன் உண்மைநிலை இன்ன தன்மைத்தென்று சொல்ல முடியாதது. 'இன்ன தன்மையன் என்றறி யாச்சிவன்'—பெரியபுராணம்.

11. 'சொல்லின் வடிவாம் சுடரொளி' - சொல்லின் உருவமாக உள்ள அம்மை என்பதாம். இறைவன் திருவருளால் சுத்த மாயையிலிருந்து நாதம் தோன்றும், நாதத்திலிருந்து விந்து தோன்றும், நாதம் ஒலிவடிவு; விந்து வரிவடிவு. எவ்வெத் தத்துவாதிபதிகட்கு எவ்வெப் பெயர்கள் உளவோ அவ்வப்பெயர்கள் அவரவர்களால் அதிட்டிக்கப்படும் தத்துவங்கட்குமாம். அம்முறையில் நாதத்திற்குச் சிவமென்றும், விந்துவிற்குச் சத்தியென்றும் பெயர். விந்துவிலிருந்து சூக்குமை, பைசந்தி, மத்திமை,

*

வைகரி என்னும் வாக்குகளும், ஏனைய சொற்பிரபஞ்சம் எல்லாமும் தோன்றும். இவைகளின் வடிவம் சத்தியாதலின் 'சொல்லின் வடிவாம் சுடரொளி,' எனப்பட்டது. 'சொல்வடிவாய் நின்னிடம் பிரியா இமையப் பாவை தன்னையும், சொற்குப் பொருளான உன்னையுமே'—பரஞ்சோதி முனிவர் திருவிளையாடல்.

12. 'தளத்திற் சிறந்த கொன்றை' - இதழ்களால் சிறந்த கொன்றை. ஐந்தெழுத்து வடிவின் ஐந்திதழ்களும், ஓங்கார வடிவின் கேசரமும் கொண்டு விளங்கும் சிறப்பு.

13. ஏலம் - மயிர்ச்சாந்து. ஓவியம் - சித்திரக்கலை வல்லார் எண்ணித் தீட்டிய உருவம்.

14. அபிராமி பட்டர் - திருக்கடவூர் அபிராமி அம்மை பேரில் அபிராமி அந்தாதி பாடி, அம்மை அருள்பெற்றுச் சித்து விளையாடி முத்தி பெற்றவர்.

15. 'என்று மினிக்கும் செந்தமிழ்' - என்றும் தன் இளமையழகு குன்றாது இனிக்கும் பண்பாடு மிக்க செவ்விய தமிழ். குருபரர்-குமரகுருபர முனிவர். 'பிள்ளைத்தமிழ்' - மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழ். முத்துமாலை அளித்தமை - விஜயநகர அரசாங்கத்தில், தென்னாட்டரசுரிமை பெற்று, மதுரையிலிருந்து அரசு செலுத்திய திருமலை நாயக்கர் அவைக்களத்தில் குமரகுருபர முனிவர், மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழை அரங்கேற்றும் பொழுது, அம்மையார் அருச்சகர் திருமகள் வடிவாய் எழுந்தருளி நாயக்கர் மடித்தலத்திருந்து, வருகைப் பருவத்தில், 'தொடுக்குங் கடவுட் பழம்பாடல்' என்னும் செய்யுளை மற்றுமொருகால் பொருள் கூறக்கேட்டு, அரசர் மார்பிலிருந்து முத்துமாலையைக் கழற்றிக் குமரகுருபர முனிவருக்குப் பரிசாக அளித்தனர் என்பது.

16. 'கலைஞான.........கடந்த துரிய நிலையே - புகழ்ந்து சொல்லப்படுவதாகிய கலை அறிவின் துறைகள் எல்லாவற்றையும் கடந்த நிலையில் இருப்பவளே. 'கலைஞானம்' - பாசஞானம்; பாசஞானம் பதிஞானத்தினை அடைதற்குக் கருவியாவதன்றி இறைவனை நேரே அடைதற்குக் கருவியாகாது. 'வேதசாத்திரம் மிருதி புராணகலை ஞானம் விரும்பசபை, வைகரியாதித்திறங்கள்

மேலாம், நாதமுடி வானவெல்லாம் பாசஞானம்'—சிவஞான சித்தியார். 'பாச ஞானத்தாலும் பசுஞானத்தாலும் பார்ப்பரிய பரம்பரனை'—சிவஞான சித்தியார். 'பாசமா ஞானத்தாலும் படர்பசு ஞானத்தாலும் ஈசனை அறியவொண்ணாது'—சிவப்பிரகாசம்.

17 'ஒளிக்குள் ஒளி' - மாயாகாரிய ஒளிகளுக்கெல்லாம் உள்ளொளியாக உள்ள அருளொளி.

18. 'வெளிக்குள் வெளியாம் அம்பரம்' - பூதாகாய வெளிக்குள் வெளியாக உள்ள சிதாகாயம்; சிற்சபை. 'அளிக்குநிலை தான்......உரைப்ப வாராது' - இறைவன் உயிர்களுக்கு அருள் செய்யுமாறு கொள்ளும் அருள்வடிவ நிலைகள் இந்நிலைமைத்துத்தான் என்று வரையறுத்துக் கூற இயலாது. 'ஆட்பா லவர்க்கருளும் வண்ணமும் ஆதிமாண்பும், கேட்பான் புகில்அளவில்லை கிளக்க வேண்டா,'—திருஞான சம்பந்தர் தேவாரம்.

19. 'பிறவிக் கடல்கடக்க ஒளியால் அழைக்கும் மணி விளக்கு' - பிறவிப் பெருங்கடல், ஆணவமலமாகிய இருட்பெருக்கினுட்பட்டதாகலின், அவ்விருளிற் பிறவிப் பெருங்கடலைக் கடந்து முத்தியங்கரையிற் சேர்தற்கு வேண்டப்படுவது ஞானமாகிய கலங்கரை விளக்கம். அந்த ஞானமணி விளக்கமாக அம்மையிருந்து முத்தியங்கரைக்கு அழைக்கின்றாள்.

22. 'என்றும் அவன்தன் திருவுளத்தில்......ஓவியமே' - இறைவன் திருவுள்ளத்தில் இன்பம் பெருகவும் அழகு ஒழுகவும் நன்றாக என்றும் எழுதிப் பார்த்துக்கொண்டிருக்கும் உயிர்ச்சித்திரமாக உள்ளவளே என்பது. இறைவன் திருவருள் அவனது நெஞ்சத் தாமரையை விட்டகலாது, தோற்றம், நிலை, இறுதி, மறைவு, அருளல் என்னும் ஐந்தொழிலையும் நடத்தி, எழில் ஒழுக இன்ப ஊற்றாக என்றுமிருப்பது என்னும் தத்துவக் குறிப்பினை உடையது. 'எரிதரங்கம் உடுக்கும் புவனம் கடந்துநின்ற ஒருவன் திருவுள்ளத்தில் அழகொழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிர் ஓவியமே'—மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ். 'விமல ஞானம்' - மலமற்ற ஞானம்.

23. ' ஆடற்கினிய......அழகின் இனிக்க சதிகாட்டும்' - ஆடுதற்கிசையத் தாளமிட்டு ஓசையை வரையறுத்துக் காட்டல். சதி - ஜதி. 'கூடிய இலயம் சதி பிழையாமை கொடியிடை யுமையவள் காண ஆடிய அழகா'—சுந்தரர் தேவாரம்.

26. 'துரியஞான மெய்வடிவு' - துரியஞானம் : பதிஞானம். அதன் உண்மை வடிவம் அருள். 'அருளது சத்தியாகும்'; 'சத்திதன் வடிவே தென்னின் தடையிலா ஞான மாகும்'—சிவ ஞான சித்தியார்.

27. 'மின்னின் மலரும் மடல்தாழை' - மின்னலின் மலரும் மடலை உடைய தாழை. 'புனையா வடிவம்' - ஒப்பனை செய்யாது இயற்கையே அழகுடைய வடிவம்.

29. 'கலைகள் புராணும் கலைஞருளக் கண்ணின் ஒளி' - கலை ஞானப் பெருக்குடையாரது கண்ணின் ஒளியாக உள்ளவள்.

33. 'மூவர்தமக்கும் முழு முதல்' - தோற்ற ஒடுக்கங்க ளுடைய பிரம்மா, விஷ்ணு, உருத்திரர் என்னும் மூவரும் தோன் றும் மூலமாக உள்ளவள். 'பயந்துகாத்து அழிக்கும் மற்றை மூவர் கோனாய் நின்ற முதல்வன் மூர்த்தி மூதாதை மாதாளும் பாகத்து எந்தை'—திருவாசகம்.

35. 'எண்ணெண் கலையின் எழில்வடிவு' - 64 கலைஞானங் களின் அழகுருவமாக உள்ளவள்.

36. மூவர் - திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர். தெளிந்தோர் - ஞானிகள். உளத்துத் திருவிளக்கு - உள்ளத்தின் அருளொளி.

38. செயிர்தீர் - குற்றம் நீங்கிய. எயில்.........கொடு கொட்டி - இறைவன் முப்புரத்தில் எரியூட்டிக் கைகொட்டியாடிய நடனம். கொடிதாகிய கொட்டி - கொடுகொட்டி ; மறக்கருணை காட்டி ஆடியதாகலின் இப்பெயர் பெற்றது. 'படுபறை பலவியம் பப் பல்லுருவம் பெயர்த்துநீ, கொடுகொட்டி ஆடுங்கால் கோடுயர் அகலல்குல், கொடிபுரை நுசுப்பினாள் கொண்டசீர்த் தருவாளோ' —கலித்தொகை. 'பாரதி ஆடிய பாரதி அரங்கத்துத், திரிபுரம் எரியத் தேவர் வேண்ட, எரிமுகப் பேரம்பு ஏவல் கேட்ப, உமை

யவள் ஒருதிறன் ஆக ஓங்கிய, இமையவன் ஆடிய கொடுகொட்டி ஆடல்'—சிலப்பதிகாரம்.

43. 'பூவிற் புகழ் செந்தாமரையும்......அமைந்த வடிவே' என்பது, தலைமுதல் அடிவரை அம்மையின் வடிவமுற்றும், அவ்வவ் வங்கங்கட்குரிய உவமை காட்டும் மலர்களால் உணர்த்தப்பட்டது. 'திருவளர் தாமரை சீர்வளர் காவிகள்' என்னுந் திருக்கோவை யாரிற் போல.

44. 'நிலனும் நீரும் தீவளியும் நிலைத்த வானும் இவை சேர்ந்த, பலனுறுலகு' - நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்னும் ஐம்பெரும்பூதச் சேர்க்கையால் ஆகிய உலகம். 'நிலம்நீர் தீவளி விசும்போ டைந்தும், கலந்த மயக்கம் உலகம்'—தொல்காப்பியம். உலகமே அவளது உருவம் என்பது, 'உலகமே உருவமாக'—சிவ ஞானசித்தியார்.

51. திசையார்......அழகார் வடிவம் - காமனை எரித்த கண்ணுதற் பெருமானே காதலித்து மணந்துகொள்ளுமாறு அழகொளி வீசி மாறாப் புகழ்கொண்ட வடிவம். 'ஒருமணத்தைச் சிதைவு செய்து வல்வழக்கிட் டாட்கொண்ட உவனைக்கொண்டே, இரு மணத்தைக் கொண்டருளி' என்றது போன்ற ஓர் உருவகம்.

53. ஆடா விளக்கு - சுடர் அலைபாத விளக்கு. 'அனிலம் சேரா விளக்கதுபோல்' (அனிலம் - காற்று)—திருப்போரூர்ச் சந்நிதிமுறை.

54. புலனும் ஐங்களிறு - மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்புலனாகிய யானைகள். 'ஐந்துள யானை அடவியுள் வாழ்வன'—திருமந்திரம். பாகன் காலால் குறிப்பிடுவதனைத் தலையால் செய்வது யானை. அம்முறையில் ஈன்ற தாயாகிய நீ, பாகன் நிலையில் அமர்ந்து அருளால் புலன்களின் மதமடக்கி நின் பணி யாற்றுமாறு நின் திருவடிகளால் குறித்துக் காட்டல் நின் கடமை யன்றோ என்பது குவியா ஞானம் - தன்னிலையில் குன்றாத ஞானம்; பரஞானம்.

56. அப்பால்நிலை - இறைவன் சொருபநிலை. அஃது 'இப் படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவனிறைவன் என்றெழு

திக்' காட்டொணுதது, 'எந்தை யார் அவர் எவ்வகை யார்கொலோ' —திருஞான சம்பந்தர் தேவாரம். 'இன்ன தன்மையன் என்றறி வொண்ணு எம்மான்'—சுந்தரர் தேவாரம். 'இன்ன தன்மையன் என்றறி யாச்சிவன்'—பெரியபுராணம். உலகின் உருவின்...... கலந்தெங்கும் மருவி இலங்கும் - இறைவன் உலகுயிர்களொடு, அவையே ஆகியும், அவற்றின் வேருகியும், அவற்றின் உடனுகியும் நிற்கும் அத்துவித நிலை. 'எட்டுத் திசை தாஞய், வேருய், உட னுனிடம் வீழிம்மிழலையே'—திருஞான சம்பந்தர் தேவாரம். 'நிலம்நீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன், புலஞய மைந்தனெடு எண்வகையாய்ப் புணர்ந்து நின்ருன்'—திருவாசகம். ஒன்ருகாமல் இரண்டாகாமல் ஒன்றுமிரண்டு மின்ருகாமல் என்ப தும், கலப்பால் ஒன்ருகியும் பொருட்டன்மையால் வேருகியும் என்பதும் இவ்வத்துவித நிலையேயாம். இது 'சுத்தாத்துவிதம்' எனப்படும்.

58. சீர்காழிப் புனிதக் குழந்தை - சீர்காழியிலே தோன்றிய திருவருட் புனிதமுடைய குழந்தை, திருஞானசம்பந்தப் பெருமான். 'அளித்த............கலை ஒளியே'—திருஞானசம்பந்தப் பெருமான் தமது மூன்ரும் ஆண்டில், ஒரு நாள், நீராடச் செல்லும் தம் தாதையாருடன் சென்று, குளக்கரையில் இருக்க, நீராடும் தாதையார் நீர்க்குள் மூழ்கியிருந்தபோது, அவரைக் காணப் பெருது, வெருவி, முற்பிறப்பின் உணர்ச்சியால் தோணியப்பர் திருக்கோயில் சிகரத்தைப் பார்த்து 'அம்மே அப்பா' என அழுதனர். முற்செய்தவச் சிறப்பால் உலகெலாம் அளிக்கும் தாய்தந்தைய ராகிய அம்மையும் அப்பரும் அருளுருவத்துடன் அவர்முன் தோன்றி, சிவஞானம் கலந்த ஞானப்பாலூட்டிச் சென்றனர். அதனுல் அவர் சிவஞானம் கைவரப் பெற்றுத் திருஞானசம்பந்தர் என்னும் திருப்பெயருடன், செந்தமிழ் மாமறையாகிய தேவாரப் பனுவல்களைப் பாடிவரலாயினர். இவ்வரலாறு,

'போதையார் பொற்கிண்ணத்தடிசில் பொல்லாதெனத்
தாதையார் முனிவுறத்தானெனை ஆண்டவன்'

என அவர் திருவாக்கினாலேயே ஓதப்பட்டுள்ளது. இஃது அகச் சான்று—விரிவு பெரியபுராணத்திற் காண்க.

59. ஞான உருவாம் புகலியர்கோன் - ஞானமே உருவாகிய ஞானசம்பந்தர். 'ஞானத்தின் திருஉருவை'—பெரியபுராணம்.

62. வல்லாணவம் - வலிதாகிய ஆணவம்; வலிமை, தானொன்றிருப்பதும் அறியவொட்டாது செய்யும் தன்மை 'ஒரு பொருளுங் காட்டா திருளுருவம் காட்டும், இருபொருளும் காட்டா திது'; 'பலரைப் புணர்ந்தும் இருட்பாவைக் குண்டென்றும், கணவர்க்குந் தோன்றாத கற்பு'—திருவருட்பயன்.

64. சாம்பலணிந்து பணிந்தெழுவார் - 'சாம்பலைப் பூசித் தரையிற் கிடந்து நின்றாள் பரவி'—திருநாவுக்கரசர்.

65. 'ஆறு வதன தாமரைகள் அலரும் மதுரச் சுவைமடுவே' ஆறு தாமரைமலர்கள்போலும் ஆறுமுகங்களை உடைய பெருமான் தோன்றுதற்கு இடமான பேரின்பமாகிய மதுரமிக்க நீரையுடைய மடுவைப்போலும் அம்மையே. 'ஆறுவதன தாமரைகள்...மடுவே' என்னும் சிதம்பரசுவாமிகள் திருவாக்கு மடுவும் அதில் தோன்றும் தாமரையும் முருகனேயாக வைத்தோதப்பட்டது.

72. கள்ளப் புலன்கள் உள்ளொளிரக் காட்சி அளிக்கும் - அழிந்தொழியும் பொய்ப்பொருளைக் காட்டி உலகாசையைப் பெருக்கும் ஐம்புலன்களும் ஞானஒளி பெற்று மெய்ப்பொருளைக் காட்டுகின்ற. 'கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே'—திருமந்திரம்.

73. உள்ளக் கிழியின் உருவெழுதி...நினைந்துருகி - உருவத் தியானத்தின் அழுந்தி நிற்றல். 'உயிரா வணமிருந்து உற்று நோக்கி உள்ளக் கிழியின் உருவெழுதி' என்னும் திருநாவுக்கரசர் திருவாக்கு இதனை வற்புறுத்தல் காண்க. அள்ளும் உள்ளத் திரை நீங்கி அமைந்த நீரின் தெளிந்து - உள்ளத்தை அள்ளிக்கொண்டிருக்கும் ஆசைஅலைகள் நீங்கி அலையற்ற நீர்போல் தெளிந்த சிந்தையுடன். 'திரையற்ற நீர்போல் சிந்தை தெளிவார்க்குப், புரையற் றிருந்தான் புரிசடை யோனே'—திருமந்திரம். தெள்ளுதமிழ் - தெளிவின்மிக்க தமிழ். அமுதப் பிழம்பு - அருளமுதப் பிழம்பு.

74. அள்ளல் உள்ளத்து - பாசப்பற்ருகிய சேறு நிறைந்த உள்ளத்தில்.

75. புயலும்...காட்சியென நான் காண்பேனே - இயற்கை வடிவமெல்லாம் உன் வடிவமாகக் காண்பேனே.

76. பாசம் அகல...பரிபாகம் செய் பைந்தொடியே - உயிர்கள் மலம் பரிபாக மடையுமாறு, வினைகளைத் துய்த்துத் தீர்க்கத் திரோதான சத்தியென்னும் பெயருடன் மலங்களில் ஒன்ருய், ஏனைய மலங்கள் தம்தம் தொழில்களைச் செய்யும்படி செய்து மலம் பரிபாகம் அடைந்தபின் அருட்சத்தியாய் நின்று அருளைத் தரும் அம்மையே. ' ஏயுமிம் மலங்கள் தத்தம் தொழிலினை இயற்ற ஏவும் தூயவன் தனதோர் சத்தித் திரோதான கரியதென்றும் '—சிவஞான சித்தியார். ஊசலாடும்......உன்தாள் நிறுத்தாய் - புலன்கள் செல்லும் வழியெல்லாம் சென்று அலமந்து நிற்கும் எனது உள்ளத்தை உனது தாளாகிய அருள்நிலையிலே நிற்க அருள்புரிவாயாக.

78. பண்ணின் இசையாய்...கண்ணின் மணியே - பண்ணின் இசையைப்போலவும், பழத்திற் சுவையைப்போலவும், பாலின் நெய்யைப்போலவும் உயிர்களுடன் இரண்டறக் கலந்து நிற்கும் கண்மணிபோலும் அம்மையே. இஃது இறைவி உலகுயிர்களோடு இரண்டறக் கலந்து நிற்கும் அத்துவித நிலையை உணர்த்துவது. ' பாலின் நெய்யாம் பழத்தின் இரதமாம் பாட்டிற் பண்ணும் '—திருநாவுக்கரசர். ' பண்ணிடை தமிழொப்பாய் பழத்தினிற் சுவையொப்பாய் கண்ணிடை மணியொப்பாய் '—சுந்தரர். 'பண்ணையும் ஓசையும் போலப் பழமதுவும் எண்ணும் சுவையும்போல் எங்குமாம் '—சிவஞானபோதம்.

81. எண்ணில் படைப்பும்...எந்தை அழிததே வந்தாலும் - எண்ணற்ற படைப்புக்களும் இளைப்பாறும்வண்ணம் எம்பெருமான் அழித்தற்ருெழிலைச் செய்துவரினும். ' அழிப்பு இளைப்பாற்றல் '—சிவஞானசித்தியார். இறைவன் அழித்த படைப்புக்களைச் சகசமலம் நீங்குமாறு மீட்டும் தனு கரண புவன போகங்களுடன் தோற்றுவிக்கும் சங்கற்பம் நின்னுடையதாகையால் கருணை வடிவான நீ என்னை அணைத்து அருள்புரிவாயாக.

82. ஏது சூழும் கற்பனைகள்......எழிலொளியே - காரணங்களால் கடவுள் நிலையை அளந்துரைக்கும் கலைகளையெல்லாம் கடந்து நிற்கும் அற்புதமிக்க சிற்பர ஒளியே; கடவுள் நிலை கலையறிவிற் கப்பாற்பட்டதென்பது! 'ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும், மிக்குச் சோதிக்க வேண்டா சுடர்விட்டுளன் எங்கள் சோதி'—திருஞான சம்பந்தர். 'மறையினால் அயனால் மாலால் மனத்தினால் வாக்கால் மற்றும், குறைவிலா அளவி னாலுங் கூறொணா தாகி நின்ற, இறைவன்'—சிவஞானசித்தியார்.

83. காமக் கண்ணி - காமாட்சி அம்மை. காமம் - அழகு: ஆட்சி - கண். அழகிய கண்களை உடையாள். சொற்றேர் முப்பத்திரண்டறமும் துலங்க அளித்த - அம்மை உலகத்தோர்க்குச் சிறந்த அறங்களை விளக்கி, அவர்களை அறவழியிலே நடாத்த விரும்பி, இறைவனிடம் இருநாழி நெற்கொண்டு, அதனை உழவுத் தொழிற்குரியாரால் பெருக்கி, சிறந்தன எனப்பட்ட முப்பத்திரண்டு அறங்களையும் காஞ்சிமாநகரில் செய்தாள் என்பது.

85. பதிஞானம்......கொழிக்கும் ஒளியே - பதிஞானம் - சிவஞானம். சிவஞானம் அடைந்தோர் மனத்தில் ஆனந்தத்தை அளிக்கும் ஒளியே.

86. அமர வாழ்வு - அழியா வாழ்வு.

87. தரங்கங் கொழியா அருட்கடல் - அலையில்லாத அருட்கடல்.

88. இளகும் உளம் - கருணை வடிவான மனம்.

89. அலகில்......அருட்கடலே - உலகுயிர்கள் எல்லாவற்றிலும் கலந்திருந்தும் அவைகள் எல்லாவற்றையும் கடந்துநிற்றல். 'இருநிலனாய்த் தீயாகி நீருமாகி' என்றும், 'மலையல்லை கடலல்லை வாயுவல்லை' என்றும் 'விரிகதிர் ஞாயிறல்லர் மதியல்லர் வேத விதியல்லர் விண்ணு நிலனும் திரிதரு வாயுவல்லர்' என்றும் போந்த திருநாவுக்கரசர் திருவாக்குக்கள் இதனை உணர்த்தல் காண்க. 'உலகெலா மாகி வேறாய்'—சிவஞானசித்தியார்.

92. கங்குற் குழல் - இருள்போலும் கரிய குழல்.

93. கன்று நினைந்த புனிற்று - கன்றீன்று சிலநாட்களும் கழியாத பசு, அக்கன்றினைக் காணாது நினைந்ததுபோலும்.

94. அருவுருவம் - அருவமும், உருவமும் அல்லாத ஒன்று. திருவொற்றியிலே உள்ள மூலத்தான மூர்த்தி. பருவுருவா மிவ்வுலகத்து......அருளாயே - காரிய வடிவமாகிய இவ்வுலகத்தில் ஆணவம், மாயை, கன்மங்களைத் தொழிற்படுத்துமாறு, அருட் சத்தியாம் உன் ஒருகூறே திரோதான சத்தி என அம்மலங்களுடன் விரவி மலமாக நின்று, உயிர்களுக்கு வினைப் போகங்களை ஊட்டி வருதலால், அவற்றை அனுபவித்து உன் நிலையறிந்து உன் தாளடைந்தேன். திரோதான சத்தி என நிற்கும் நீ அருட்சத்தியாக வெளிப்பட் டருள்வாயாக.

95. அடியருளம் - அடுப்பு. மலம் - விறகு. ஞானம் - அனல். அருள் - உலை. சிவபோகம் - அமுது.

98. ஒளிவாழ்வு-இம்மையில் புகழுடைய வாழ்வு, மறுமையில் ஞானவாழ்வு. ஞானவடிவினனை இறைவனுடன் கலந்த வாழ்வு.

குறிப்பு:—வெங்கல் முனிவர், வெங்கனூர் முனிவர், வேங்கை மரத்து முனிவர் என்னும் மூவரும் இந்நூலைப் பாடுமாறு என்னைத் தூண்டியவர்கள் ஆதலின், அம் மூவர் பெயர்களும் இந்நூலகத்து ஆண்டாண்டு குறிக்கப்பெற்றுள்ளன.